## 12

# பூமியில் உங்கள் கடைசி நாளைச் செலவிடுவது எவ்வாறு?

### (2 இராஜாக்கள் 2:1-18)

*எலியாவைப் பற்றிய நமது பாடத்தொடரின் முடிவை நாம் நெருங்குகையில் நான் சிறிதளவு கவலைப்படுகிறேன். எனது படிப்பை நான் தொடங்கியபோது, எலியா தற்செயலாகப் பழக்கம் ஆனவராக இருந்தார். அவரைப் பற்றி அறிந்துகொண்ட சில மாதங்களுக்குப் பின்பு, அவரை நான் ஒரு நண்பராக நினைக்கிறேன்.*

*2 இராஜாக்கள் 2:1-18ல், எவரொருவரின் வாழ்க்கையிலும் மிகமிக செயல் துடிப்புள்ளதாக இல்லாவிட்டாலும், மிகவும் கவனிக்கக்கூடிய முடிவுகளில் ஒன்று தரப்பட்டுள்ளது. உலக வரலாற்றில், இரண்டே இரண்டுபேர் மாத்திரமே, மரிக்காமல் பரலோகம் சென்றுள்ளனர்: ஏனோக்கு (ஆதியாகமம் 5) மற்றும் எலியா (2 இராஜாக்கள் 2).*

*எலியாவின் வாழ்வு வேறு எவ்விதமாக முடியும் என்று நாம் எதிர் பார்ப்போமா? அவர் வானத்தில் இருந்து அக்கினியை வரவழைக்கும் வல்லமை கொண்டிருக்கும்போது, அவர் தமது விரோதிகளால் கொல்லப்படுதல் என்பது சாத்தியமற்றதாக இருந்தது. இதற்கு மறுபுறத்தில், அவர் தூய போர்வைகளுக்கு இடையில் மரணப்படுக்கையில் இருப்பதாகக் கற்பனை செய்தல் கடினமானதாக உள்ளது. அவர் அசாதாரணமான வாழ்க்கையொன்றை வாழ்ந்தார், அவர் அந்த வாழ்விற்கு அசாதாரணமான முடிவு ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் என்பது பொருத்தமானதாகவே உள்ளது.*

*இப்போது நாம், "பூமியில் உங்கள் கடைசி நாளைச் செலவிடுவது எவ்வாறு" என்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போமாக. 2 இராஜாக்கள் 2:1-18ல், எலியா தமது கடைசிநாளை எவ்வாறு செலவிட்டார் என்பது பற்றி நமக்குக் கூறப்படுகிறது.*

*நாளைய தினமானது பூமியில் உங்கள் கடைசி நாளாக இருக்கும் என்று சந்தேகத்திற்கு இடம் இன்றி நீங்கள் அறிந்திருந்தால், அந்த நாளை நீங்கள் எவ்வாறு செலவிடுவீர்கள்? இந்தக் கேள்வியானது, மக்களை எப்போதுமே கவர்ந்து ஈர்த்துள்ளது. கதைகள், புத்தகங்கள், நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் ஆகியவை, தாங்கள் வாழ்வதற்கு ஒருசில மணி நேரமே உள்ளது என்று அறிந்த மக்களின் உணர்வுகளையும் செயல்பாடுகளையும் ஆராய்ந்துள்ளன. கிறிஸ்து மறுபடியும் வருவதற்கு இன்னும் இருபத்து நான்கு மணிநேரம் உள்ளது மற்றும் அதற்குப் பின்பு இந்த உலகம் இனியும் இராது என்பதை நாம் உண்மை*

யாகவே அறிந்திருந்தால், சமூகமானது இரண்டு முகாம்களாகப் பிரியும் என்பது எனது யூகமாக உள்ளது: ஒரு குழுவானது, மனம் வருந்துதல் மற்றும் ஜெபத்தில் நேரத்தைச் செலவிடுகிறது, ஒவ்வொரு சபைகூடிவரும் கட்டிடமும் மக்களால் நிறைந்து இருக்கிறது, மற்றும் இன்னொரு குழுவானது, "புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம்" (1 கொரிந்தியர் 15:32) என்று கூறி ஆரவார மாக வாழ்வதில் நேரத்தைச் செலவிட்டது.

வாழ்வதற்குக் குறுகிய காலத்தையே நாம் கொண்டுள்ளோம் என்று அறிந்திருத்தலுக்கு நாம் எவ்வாறு பதில்செயல் செய்வோம் என்பதை நாம் யூகிக்க வேண்டும், ஆனால் எலியாவின் விஷயத்தில் இதைப்பற்றி நாம் யூகிக்கத் தேவையில்லை. எலியா விரைவில் தாம் பூமியிலிருந்து எடுக்கப்படவிருப்பதை அறிந்திருந்தார். இந்த அதிகாரம் "*கர்த்தர் எலியாவைச் சுழல்காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப் போகிறபோது*, எலியா எலிசாவோடேகூடக் கில்காலிலிருந்து புறப்பட்டுப்போனான்" என்று தொடங்குகிறது (வசனம் 1; என்னால் வலியுறுத்தப்படுகிறது). எலிசாவிடம் எலியா, "*உன்னைவிட்டு நான் எடுத்துக்கொள்ளப்படுகையில்* என்னை நீ கண்டால் உனக்குக் கிடைக்கும்" என்று கூறினார் (வசனம் 10; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

பூமியில் தமது கடைசி நாள் இதுவாக இருந்தது என்று முற்றிலும் அறிந்து நிலையில் எலியா, அந்த நாளை எவ்வாறு செலவிட்டார் என்று நாம் கண்ணோக்குவோமாக. அநேகமாக இதுவே நாமும்கூட பூமியில் நமது கடைசிநாளைச் செலவிட வேண்டிய வகையாக உள்ளது.

## தேவனுடைய சித்தத்தைச் செய்வதில் உங்கள் கடைசி நாளைச் செலவிடுங்கள் (2:1, 2)

> கர்த்தர் எலியாவைச் சுழல்காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப் போகிறபோது, எலியா எலிசாவோடேகூடக் கில்காலிலிருந்து புறப்பட்டுப்போனான். எலியா எலிசாவை நோக்கி: நீ இங்கே இரு; கர்த்தர் என்னைப் பெத்தேல் மட்டும் போக அனுப்புகிறார் என்றான். அதற்கு எலிசா: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும்கொண்டு சொல்லுகிறேன் என்றான்; அப்படியே இருவரும் பெத்தேலுக்குப் போனார்கள் (வசனங்கள் 1, 2).

நாம் முதன்முதலாக எலியாவைச் சந்தித்தபோது (1 இராஜாக்கள் 17:1), அவர் தம்மை "கர்த்தருக்கு முன்பாக நிற்கிறவராக," எஜமானருடைய ஆணையைச் செய்யத் தயாராக இருப்பவராகப் பண்புப்படுத்தினார். நாம் எலியாவை, "கர்த்தருடைய வார்த்தை" அவருக்கு தரப்பட்டவராகவும் திரும்பத் திரும்ப அதற்குப் பதில்செயல் செய்தவராகவும் கண்டிருக்கிறோம். இந்த வரலாற்றின் தொடக்கத்தில், எலியா கில்காலில் இருந்தார், இது யோசுவா தங்கியிருந்த புகழ்மிக்க இடமாக இருக்கச் சாத்தியக்கூறு உள்ளது,[1] மற்றும் தேவன் மீண்டும் பேசினார். எலியா, "*கர்த்தர்* என்னைப் பெத்தேல்மட்டும் போக அனுப்புகிறார்" என்று கூறினார்.

"அப்படியே இருவரும் [எலியாவும் எலிசாவும்] பெத்தேலுக்குப் போனார்கள்" (வசனம் 2இ). இங்கு இந்த அதிகாரத்தைப் பற்றிய ஆர்வமுள்ள

*ஒரு விபரம் உள்ளது: 1ம் வசனத்தின்படி, இது யாவும் எலியா பரலோகத் திற்கு எடுத்துச் செல்லப்படுதலுக்கு வழிநடத்திற்று. 8முதல் 11வரை உள்ள வசனங்களிலிருந்து நாம், எலியா "எடுத்துக் கொள்ளப்படுதல்" யோர்தான் நதிக்குக் கிழக்கில் நடந்தது என்று அறிகிறோம். இருப்பினும் எலியா தமது கடைசி அடைவிடத்தை அறிந்திருந்தார் என்பதற்கான குறிப்பு எதுவு மில்லை. அவர் தம்மைத் தேவன் எங்கு போகும்படி கூறினாரோ அங்கு சென்றார், அவர் கில்காலில் இருந்து பெத்தேலுக்கும், பெத்தேலில் இருந்து எரிகோவுக்கும், எரிகோவிலிருந்து யோர்தான் நதியைக் கடந்தும் சென்றார். இது ஃபோர்ட்வொர்த் என்ற இடத்திலிருந்து ஆஸ்டின் என்ற நகருக்கு ஆக்லஹாமா மற்றும் கான்சாஸ் வழியாகச் செல்வதற்கு ஏறக்குறையச் சம மான தூரமாக உள்ளது.[2] தமிழ் நாட்டில் இது திண்டுக்கல்லில் இருந்து நத்தம் காரைக்குடி வழியாக மதுரைக்குச் செல்லும் தூரமாக இருக்கலாம். தேவன் எலியாவைப் பெத்தேலுக்குச் செல்லும்படி கூறினார், எலியா அவ்வாறு சென்றார். தேவன் எலியாவை எரிகோவுக்குச் செல்லும்படி கூறினார், எலியா, அவ்வாறு சென்றார். தேவன் எலியாவை யோர்தான் நதியைக் கடந்து செல் லும்படி கூறினார், எலியா அவ்வாறு கடந்து சென்றார். தேவன் எலியாவிடம், "இது நீ பரலோகம் செல்லவேண்டிய நேரமாக உள்ளது" என்று கூறினார், எலியா அவ்வாறே செய்தார். இதுவே நாம் யாவரும் செயல்பட வேண்டிய வகையாக உள்ளது - விவாதம் எதுவும் இல்லை, முறையிடுதல் எதுவும் இல்லை, "கர்த்தாவே நான் என்ன செய்ய வேண்டும் என்று நீர் விரும்புகிறீரோ, அதையே நான் செய்வேன். நான் எங்கெல்லாம் செல்ல வேண்டும் என்று நீர் விரும்புகிறீரோ, அங்கெல்லாம் நான் செல்வேன்."*

*எலியா தேவனுடைய சித்தத்தைச் செய்வதில் அந்த நாளைச் செலவிட்டார். எலியாவின் கடைசி நாளைப் பற்றிய தொகுப்புரை ஏனோக்கைப் பற்றிய வார்த்தைகளில் இருந்து கடனாகப் பெறப்பட முடியும்: "[எலியா] தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்" (ஆதியாகமம் 5:24).*

## *தேவபக்தியுள்ள நண்பர்களுடன் உங்கள் கடைசி நாளைச் செலவிடுங்கள் (2:1, 2)*

*சமீபத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில், பிரதான பாத்திரங்களில் ஒருவராக இருந்தவர், "கூட்டத்தோடு ஓடுவதில் நான் ஒருக்காலும் அக்கறைகொண்டதில்லை" என்று கூறினார். அந்தக் கூற்றைக் கொண்டு எலியாவை அடையாளப்படுத்த முடியும். அவர் தேவனுடைய ஒரு - நபர் படையாக இருந்தார். அவர் கர்மேல் மலையின்மீது பாகாலின் படைகளுக்கு எதிராகத் தனித்து நின்றிருந்தார். அவர், "நீங்கள் தனியாகப் பயணம் செய்தால் விரைவாகப் பயணம் செய்வீர்கள்" என்று தத்துவத்தை அவர் நம்பினார் என்று நான் நினைக்கிறேன்.*

*இருந்தபோதிலும், எலியாவுக்கு ஒரு நண்பர் தேவை என்பதைத் தேவன் அறிந்தார். எலியா நம்பிக்கையிழந்தவரானபோது அவர், "நான் ஒருவன்* மாத்திரம் *மீந்திருக்கிறவன்" என்றார் (1 இராஜாக்கள் 18:22; 19:10, 14). "அது உண்மை யல்ல" என்று தேவன் கூறினார். இன்னமும் விசுவாசம் நிறைந்தவர்களாக இருந்த*

ஏழாயிரம் பேரை அவர் குறிப்பிட்டார், மற்றும் அவர் எலியாவுக்கு எலிசா என்ற பெயருடைய உதவியாளர் ஒருவரை நியமித்தார் (1 இராஜாக்கள் 19:16-21). அந்த வேளையிலிருந்து எலிசா, எலியாவின் ஊழியக்காரராக அவருடனே பயணம் சென்றார்,[3] ஆனால் அவர் ஊழியக்காரருக்கும் மேலானவராக - அவரது நண்பராக - இருந்தார். அநேகமாக, எலியா விரும்புவதற்கோ அல்லது அறிந்து கொள்வதற்கோ ஒரு சுலபமான மனிதராக இருந்திருக்கமாட்டார். இருப்பினும் மற்றவர்கள் இந்த மனிதரிடத்தில் காணமுடியாத சில விஷயங்களை எலிசா இவரிடத்தில் கண்டார் மற்றும் அவரை ஒரு நண்பராக எண்ணினார். எலியாவின் கடைசி நாளானது, அவர் அருகில் எலிசா இருக்கச் செலவிடப்பட்டது.

வேதபாட வசனப் பகுதியைப் பின்பற்றுகிறவர்கள், "ஒரு நிமிடம் பொறுங்கள். எலியா எலிசாவை விட்டு விலக முயற்சி செய்தாரே" என்று கூறலாம் உண்மைதான். "எலியா எலிசாவை நோக்கி: நீ இங்கே இரு; கர்த்தர் என்னைப் பெத்தேல்மட்டும் போக அனுப்புகிறார் என்றான். அதற்கு எலிசா: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும்கொண்டு சொல்லுகிறேன் என்றான்" (வசனம் 2). உண்மையில் இது இவ்வதிகாரத்தில், எலியா நின்ற ஒவ்வொரு நிறுத்தத்திலும் நடந்தது.

இதனுடன் கல்வியாளர்கள் போராடுகின்றனர். எலியா உண்மையில் நிறைவேற்ற முயற்சி செய்துகொண்டிருந்தது என்ன? முதல் பார்வையில், எலியா தம்முடன் எலிசா இருப்பதை விரும்பவில்லை என்பது போன்று காணப்படலாம். இருப்பினும் இவ்வரலாற்றின் முடிவில், எலியா தாம் எடுத்துக்கொள்ளப்படும்போது, எலிசா அங்கிருந்ததற்காக அவர் பலன் அளிக்கப்படுவார் என்று கூறினார், எனவே எலியா எலிசாவை விலக்கமாத்திரம் முயற்சி செய்துகொண்டிருந்தார் என்பது அரிதாகக் காணப்படுகிறது.

சிலர், எலியா பிரியாவிடைகளை வெறுத்தார் என்று ஆலோசனை கூறியுள்ளனர். எனது மனைவி ஜோ அதைக் கொண்டு அடையாளப்படுத்தப்பட முடியும். அவர்கள் ''பிரியாவிடை'' கூறுவதற்கு விமானநிலையத் திற்கு வரவேண்டாம் என்று ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களிடத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். மற்றவர்கள், எலியா எலிசாவை நீண்ட, களைப்பூட்டும் பயணத்தில் இருந்து காப்பாற்ற விரும்பினார் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். அதுவும்கூட உண்மையாகக் காணப்படவில்லை.

எலியா எலிசாவைச் சோதித்தார் என்பதே நான் வாசித்துள்ள மிகச்சிறந்த பதிலாக உள்ளது. நகோமி ரூத்தை அவளது சொந்த நாட்டிலேயே தங்கியிருக்கும்படி கேட்டுக்கொண்டபோது, அது இதே போன்ற சோதனையாக இருந்தது என்பதை நீங்கள் நினைவுகூறலாம் (ரூத் 1:11-13). "என்னிடத்தில் உனக்குக் கொடுப்பதற்கு எந்த மகன்களும் இல்லை, மற்றும் நீ ஒரு அந்நிய நாட்டிற்கு வரும்போது அங்கு அந்நியப்பெண்ணாகவே இருப்பாய்" என்று நகோமி கூறினாள். ஒருவேளை எலியாவின் வார்த்தைகள், எலிசாவின் நட்புறவு எவ்வளவு பலமாக இருந்தது என்று காண்பதற்கான ஒரு சோதனையாக இருந்திருக்கலாம். அது ஒரு சோதனையாக இருந்தது என்றால், அதை எலிசா அழகாகச் சந்தித்தார். எலியா, "நீ இங்கே இரு" என்று கூறியபோது, எலிசா, "நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும்கொண்டு சொல்லுகிறேன்" என்று கூறினார். எலியா, "நீ என்னை விரும்பினாலும் விரும்பாதிருந்தாலும், உமக்கு நான் தேவைப்படலாம். உமது நண்பர் என்ற வகையில் நான் உம்மை

விட்டுப் பிரியமாட்டேன்" என்று கூறினார் என்றே நான் நினைக்கிறேன்.

நண்பர்கள் அற்புதமானவர்களாக உள்ளனர். "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல" (ஆதியாகமம் 2:18). சரியானவற்றைச் செய்யும்படி நம்மை ஊக்கப்படுத்துவதற்கு - தாவீது கையைத் தேவனுக்குள் உறுதிப்படுத்திய யோனத்தான் போன்ற (1 சாமுவேல் 23:16; நேரடியான தரவழைப்பு) - மக்கள் நமக்குத் தேவை. நம்மில் பலர், நமது சொந்தக் குடும்பங்களிலேயே நமது மிகநெருக்கமான நண்பர்களைக் கண்டறிகிறோம்: ஒரு நல்ல மனைவி அல்லது கணவர், கிறிஸ்தவப் பெற்றோர்கள், மற்றும் கிறிஸ்தவப் பிள்ளைகள். பூமியில் இதுவே நமது கடைசி நாள் என்று நாம் அறிந்தால், நல்லவராக இருத்தல் என்பது யாருடைய பிரசன்னத்தில் சுலபமாக உள்ளதோ அந்த நண்பர்களுடன் இருப்பதை விட வேறு எதையும் அதிகமாக விரும்பமாட்டோம்.

## தேவனுடைய ஊழியத்தில் உங்கள் கடைசி நாளைச் செலவிடுங்கள் (2:2-5)

எலியாவின் பயணமானது ஒரு சிறுபிள்ளையின் புதையல் வேட்டை போன்றதாக இருந்தது. "நிலையடுக்கு இருக்கும் இடத்திற்குச் செல்." அவன் நிலையடுக்குக்குச் செல்லும்போது, அங்கு "தனியறைக்குச் செல்" என்று கூறும் குறிப்பு ஒன்றைக் கண்டறிகிறான். அவன் தனியறைக்குச் செல்லும்போது, அங்கு அவன், "படுக்கையின் அடியில் பார்" என்று குறிப்பைக் கண்டறிகிறான். இந்த எரிச்சலூட்டும் பயணம் எதற்காக? அது ஒரு நோக்கத்தைக் கொண்டிருந்ததா? அப்படி என்றால், அந்த நோக்கம் என்னவாக இருந்தது? பின்தொடரும் வசனங்களில் பதில் இருப்பதாகக் காணப்படுகிறது:

> அப்படியே இருவரும் பெத்தேலுக்குப் போனார்கள். அப்பொழுது பெத்தேலிலிருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவினிடத்தில் வந்து: இன்றைக்குக் கர்த்தர் உனக்குத் தலைமையாயிருக்கிற உன் எஜமானை உன்னைவிட்டு எடுத்துக்கொள்வார் என்பது உனக்குத் தெரியுமா என்றார்கள். அதற்கு அவன்: எனக்கு தெரியும், சும்மா இருங்கள் என்றான். பின்பு எலியா அவனை நோக்கி: எலிசாவே, நீ இங்கே இரு; கர்த்தர் என்னை எரிகோமட்டும் போக அனுப்புகிறார் என்றான். அதற்கு அவன்: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தருடைய ஜீவனையும் உம்முடைய ஜீவனையும்கொண்டு சொல்லுகிறேன் என்றான்; அப்படியே அவர்கள் எரிகோவுக்கு வந்தார்கள். எரிகோவிலிருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவினிடத்தில் வந்து: இன்றைக்குக் கர்த்தர் உனக்குத் தலைமையாயிருக்கிற உன் எஜமானை உன்னைவிட்டு எடுத்துக்கொள்வார் என்பது உனக்குத் தெரியுமா என்று அவனைக் கேட்டார்கள். அதற்கு அவன்: எனக்குத் தெரியும், சும்மா இருங்கள் என்றான் (வசனங்கள் 2ஆ-5).

ஒரு கல்வியாளர், இந்தப் பயணத்தில் பார்வையிடப்பட்ட இடங்கள் விசேஷித்த வரலாறுகள் மற்றும் நினைவுகளைக் கொண்டிருந்தன, எனவே இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டது என்று நம்பி இணங்கியுள்ளார். இந்த மூன்று இடங்களும் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த இடங்களாக இருந்தன என்பது நிச்சயமாகவே உண்மையாக உள்ளது: கில்கால் (யோசுவாவுடன்

தொடர்பு உடைய இடமாக இருந்தால்) என்பது தொடக்கங்களின் இடமாக இருந்தது. பெத்தேல் என்பது "தேவனுடைய வீடு" என்று அர்த்தப்படுகிறது, இது பலிபீடத்தின் இடமாக - ஆபிரகாமும் அவரது குடும்பத்தில் இருந்த மற்றவர்களும் திரும்பத் திரும்ப வந்த இடமாக இருந்தது. எரிகோ என்பது யோசுவா மற்றும் தேவனுடைய மக்களுக்கு வெற்றியின் மாபெரும் இடமாக இருந்தது. இருப்பினும், நினைவுகளைத் தூண்டுவதற்காக மாத்திரம் எலியாவைத் தேவன் நாள்முழுவதும் நடக்கச் செய்தாரா என்பது பற்றி நான் ஐயப்படுகிறேன். இதற்கான பதில் மிகவும் தெளிவாக இருப்பதாக நான் நினைக்கிறேன். இந்த நகரங்கள் தீர்க்கதரிசிகளுக்கான பள்ளிகள் இருந்த இடங்களாகும். (ஜீவனுள்ள வேதாகமம் என்ற ஆங்கில மொழிபெயர்ப்பில், "பெத்தேல் குருமடம்" மற்றும் "எரிகோ குருமடம்" என்ற பொழிப்புரை உள்ளது. நாம் இவற்றை "பெத்தேல் PTS [Preacher Training School]" மற்றும் "எரிகோ PTS" என்று அழைப்போம்.) மோசே, யோசுவா மற்றும் இயேசு ஆகியோர் இவ்வுலகத்தை விட்டுச் செல்வதற்கு முன், தங்களது உதவியாளர்களுக்கு கட்டளையிட்டது போலவே எலியா நிறைவுக் கட்டளைகளைக் கொடுப்பதற்கு இந்தப் பள்ளிகளில் இருப்பவர்களைச் சென்று கண்டார்.

"தீர்க்கதரிசிகளின் புத்திரர்" என்ற சொற்றொடர், இந்த மனிதர்கள் யாவரும் தீர்க்கதரிசிகளைத் தங்கள் தந்தையர்களாகக் கொண்டிருந்தனர் என்று அர்த்தப்படுவதில்லை. "புத்திரர்" என்பது "பண்புகளில் பங்கேற்றல்" என்பதைக் குறிக்கும் எபிரெய வழியாக இருந்தது. இவர்கள் தீர்க்கதரிசிகளாவதற்குப் பயிற்சி பெறுபவர்களாக இருந்தனர். இன்றைய நாட்களில் நாம் அவர்களைப் பிரசங்கியாவதற்குப் பயிற்சி பெறுபவர்கள் என்று அழைப்போம்.

அந்தப் பள்ளிகளைப் பற்றியும் அவற்றுடன் எலியாவுக்கு இருந்த தொடர்பு பற்றியும் அதிகம் அறிய நான் விரும்புகிறேன். இதைப்போன்ற பள்ளிகள் சாமுவேலின் நாட்களில் தொடங்கப்பட்டு இருந்தன, ஆனால் எலியா மற்றும் எலிசா ஆகியோரின் நாட்களில் இருந்தவை மிகவும் விரிவான மற்றும் மிகவும் வலிவார்ந்த பள்ளிகளாகும். எலியா இந்தப் பள்ளிகளைத் தொடங்கி இவற்றை இயக்கினார் என்று ஒரு பாரம்பரியம் கூறுகிறது. இது உண்மையாக இருக்கலாம், ஏனெனில் எலியாவின் இடத்தை [அவருக்குப் பின்] எலிசா எடுத்துக்கொண்டார், மற்றும் எலிசா இந்தப் பள்ளிகளுடன் இணைவுகொண்டிருந்தார் (2 இராஜாக்கள் 6:1; முதலியன.).

இந்தப் பள்ளிகளுக்கு எலியா கடைசியாகப் பயணமாகிச் சென்றபோது அங்கு என்ன நடந்தது என்று மிகச்சரியாக அறிவதற்கும் நான் விரும்புகிறேன். தீர்க்கதரிசிகளின் புத்திரர்கள் வெளியே வந்து, "இன்றைக்குக் கர்த்தர் உனக்குத் தலைமையாயிருக்கிற உன் எஜமானை உன்னைவிட்டு எடுத்துக்கொள்வார் என்பது உனக்குத் தெரியுமா?" ("இன்றைக்குப் பின்பு உம்மை வழிநடத்த எலியா இருக்கமாட்டார்.") என்று கேட்ட ஒவ்வொரு முறையும், எலிசா "எனக்குத் தெரியும், சும்மா இருங்கள்" என்று பதில் அளித்தார். ஒருவேளை எலிசா, "ஆம், இதுவே எலியாவின் கடைசிநாள் என்று நாம் அறிந்திருக்கிறோம், ஆனால் அது முக்கியமானதல்ல. அவர் உங்களுக்குக் கூறவிரும்புவது என்ன என்பதே முக்கியமானதாகும், எனவே அமைதியாகக் கவனியுங்கள்" என்று கூறியிருக்கலாம்.[4]

அந்தத் தீர்க்கதரிசனப் பயிற்சியாளர்களுக்கு எலியா கூறியது என்ன? அவரது உரையானது மோசே அல்லது யோசுவாவின் பிரியாவிடை உரையைப்

போன்றோ அல்லது யோவான் 14-16ல் இயேசு தமது சீஷர்களுக்குக் கூறிய பிரியாவிடை உரையைப் போன்றோ இருந்திருக்கலாம். ஒருவேளை எலியா பின்வருவது போன்ற ஒரு ஜெபத்துடன் முடித்திருக்கலாம்:

> "நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் ... ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்" (யோவான் 17:11).

தீர்க்கதரிசிகளின் பள்ளிகளுக்கு எலியாவின் பார்வையிடலின் உண்மையான நோக்கம் எதுவாக இருந்தாலும், அவர் எதைக் கூறியிருந்தாலும், ஒரு விஷயம் தெளிவானதாக உள்ளது: எலியா பூமியில் தமது கடைசி நாளை தேவனுடைய ஊழியத்தில் மும்முரமாகச் செலவிட்டார்!

பல ஆண்டுகளுக்கு முன்பு, இங்கிலாந்தில் இருந்த ஒரு பிரசங்கியாரிடத்தில், அடுத்தநாள் அவர் இப்பூமியில் வாழும் கடைசி நாள் என்று அவர் அறிந்தால், அவர் என்ன செய்வார் என்று கேட்கப்பட்டது. அவர் அந்தக் கேள்வியைப் பற்றிச் சிந்தித்தபின்பு, "நான் காலை 6.00 மணிக்குத் துயில் எழுந்து, ஒரு மணி நேரம் ஜெபித்துப் பின்பு காலை உணவை எடுத்துக்கொள்வேன். பின்பு நான் காலை நேரத்தில் படிப்பேன், எளிய மதிய உணவை எடுத்துக்கொள்வேன், பிற்பகல் வேளையில் வீடு சந்திப்புக்குச் செல்வேன், மருத்துவமனைகளுக்குச் செல் வேன், இரவு உணவை எடுத்துக்கொள்வேன், வாரத்தின் இடைநாள் ஊழியத் திற்குச் செல்வேன், வீட்டிற்கு வருவேன், ஒரு கோப்பை தேனீர் அருந்துவேன், மற்றும் படுக்கைக்குச் செல்வேன்" என்று பதில் அளித்தார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் எப்போதும் செய்ததையே செய்வார். *ஒவ்வொரு நாளும்* கர்த்தருடைய ஊழியத்தில் வாழுதல் என்பதே அவரது திட்டமாக இருந்தது.

நாம் யாவரும் பணிமும்முரமாக இருக்க வேண்டும், ஆனால் பணிமும்முர மாக மாத்திரம் அல்ல. *நாம் தேவனுடைய ஊழியத்தில்* பணிமும்முரமாக இருக்க வேண்டும். நமது வாழ்விற்குத் தேவன் ஒரு திட்டத்தைக் கொண்டுள்ளார். நாம் என்ன செய்துகொண்டிருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ, அதை அவர் நமக்குக் கூறியிருக்கிறார், மற்றும் நாம் அதில் பணிமும்முரமாயிருக்க வேண்டும்.

## நன்மைக்காக உங்கள் செல்வாக்கை பாதுகாப்பதில் உங்கள் கடைசி நாளைச் செலவிடுங்கள் (2:2-10)

பெரும்பான்மையான தனிநபர்கள், பூமியில் தங்கள் கடைசிநாள் இது தான் என்று அறிந்த நிலையில், அந்த நாளின் ஒரு பகுதியை, கட்டப்படாத நுனிகளை இறுகக் கட்டுவதில் செலவிட விரும்புவார்கள். மற்ற விஷயங்களுக்கு மத்தியில், அவர்கள் தங்களால் முடிந்த அளவுக்கு மிகவும் சிறப்பாக, தாங்கள் தொடங்கிய எந்த ஒரு நற்பணியும் தொடரவேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள விரும்புவார்கள். எலியா தீர்க்கதரிசிகளின் பள்ளிகளைப் பார்வையிட்டபோது, அவர் (தேவனுடைய வழிநடத்துதலின் கீழ்) அதையே செய்தார் மற்றும் கடைசியாக அவர் தமது ஊழியத்தை எலிசாவிடம் திருப்பினார் என்று நான் நினைக்கிறேன்.

*பின்பு எலியா அவனை நோக்கி: நீ இங்கே இரு; கர்த்தர் என்னை யோர்தானுக்கு அனுப்புகிறார் என்றான். அதற்கு அவன்: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தருடைய ஜீவனையும் உம்முடைய ஜீவனையும்கொண்டு சொல்லுகிறேன் என்றான்; அப்படியே இருவரும் போனார்கள்.*

*தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஐம்பதுபேர் போய், தூரத்திலே பார்த்துக்கொண்டு நின்றார்கள், அவர்கள் இருவரும் யோர்தான் கரையிலே நின்றார்கள் (வசனங்கள் 6, 7).*

எரிகோவில் இருந்த "பிரசங்கியார் பயிற்சிப் பள்ளியில்" குறைந்த பட்சம் ஐம்பது பேர் இருந்தனர் - இது ஊழியத்தைத் தொடர்ந்து செய்வதற்கு ஒரு நல்ல எண்ணிக்கையாகும்! இந்த ஐம்பது மனிதர்களும் என்ன நடக்கும் என்று காண்பதற்குக் கவனித்துக்கொண்டு "தூரத்திலே பார்த்துக்கொண்டு நின்றார்கள்." எரிகோவிற்கு அருகில் உயர்த்தப்பட்ட பல இடங்கள் இருந்தன. அந்த உயர்ந்த இடங்களில் ஒன்றின்மீது அவர்கள் இருந்தனர் என்றால், அவர்கள் எலியா மற்றும் எலிசா ஆகியோரிடத்தில் இருந்து பல மைல்கள் தூரத்தில் இருந்தனர். எலியாவின் வாழ்வினுடைய முடிவு நிமிடங்களின் இறங்கு வரிசை தொடருகையில், ஆர்வத்திற்கு உரிய ஒரு விஷயம் நடந்தது.

எலியாவின் வாழ்வினுடைய முடிவு நிமிடங்களின் இறங்கு வரிசை தொடருகையில், ஆர்வத்திற்கு உரிய ஒரு விஷயம் நடந்தது:

*அப்பொழுது எலியா, தன் சால்வையை[5] எடுத்து முறுக்கித் தண்ணீரை அடித்தான்; அது இருபக்கமாகப் பிரிந்தது; அவர்கள் இருவரும் உலர்ந்த தரைவழியாய் அக்கரைக்குப் போனார்கள் (வசனம் 8).*

எலியா தமது சால்வையை எடுத்து, அதை ஒரு கோல்போன்று முறுக்கி, அதைக்கொண்டு - நீண்ட காலத்திற்கு முன்பு மோசே செங்கடலை அடித்தது போன்று தண்ணீரை அடித்தார் மற்றும் தண்ணீர் இரு பக்கமாகப் பிரிந்தது. இரு மனிதர்களும் நீண்ட காலத்திற்கு முன்பு யோசுவா மற்றும் அவரது படைகள் யோர்தான் நதியைக் கடந்து சென்றது போல் உலர்ந்த தரைவழியாய் அக்கரைக்குப் போனார்கள் (யோசுவா 3:17).[6]

*அவர்கள் அக்கரைப்பட்டபின்பு, எலியா எலிசாவை நோக்கி: நான் உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளப்படுமுன்னே நான் உனக்குச் செய்யவேண்டியது என்ன கேள் என்றான். அதற்கு எலிசா: உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்பிடி வேண்டுகிறேன் என்றான் (வசனம் 9).*

எலியாவிடம் இருந்த ஆவியின் வரத்தை "இரட்டிப்பாக" எலிசா கேட்டபோது, அது எலியா கொண்டிருந்த வல்லமையைப் போன்று இருமடங்கை அவர் கேட்டதாக ஒலிக்கிறது. இருப்பினும் தொடரும் அதிகாரங்களில், எலிசா எலியாவைப் போன்று இருமடங்கு வல்லமை நிறைந்தவர் என்ற மனப்பதிவை நாம் பெறுவதில்லை. எலிசா அனேகமாக, தாம் எலியாவின் ஆவிக்குரிய வாரிசு என்று கருதப்பட வேண்டும் என்பதாகக் கேட்டிருக்கலாம்;

மூத்த மகனுக்கு "இருமடங்கு" சொத்து கிடைத்தது (உபாகமம் 21:17). எலிசா எலியாவைத் தமது ஆவிக்குரிய தகப்பனாகக் கருதினார் (வசனம் 12).

"அதற்கு அவன் (எலியா): அரிதான காரியத்தைக் கேட்டாய்" என்றார் (வசனம் 10அ). அந்த வேண்டுகோளைத் தேவன் மாத்திரமே நிறைவேற்ற முடியும் என்பதால், அது "அரிதானதாக" இருந்தது; எலியா தம் சொந்தத்தில் அதைச் செய்ய இயலாதவராக இருந்தார். இருப்பினும் ஒரு நிபந்தனை இருந்தது: "உன்னைவிட்டு நான் எடுத்துக்கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால் உனக்குக் கிடைக்கும்; இல்லாவிட்டால் கிடையாது என்றான்" (வசனம் 10ஆ). (எலியா எடுத்துக் கொள்ளப்பட்டபோது அவருடன் எலிசா *இருந்தபடியால்*, அவர் மீது எலியாவின் சால்வை விழுந்தபோது "இரட்டிப்பான வல்லமையை" *பெற்றுக் கொண்டார்*.)

எலியா இவ்வாழ்வில் தமது ஊழியத்தில் வெற்றியடைந்தாரா அல்லது தோல்வியடைந்தாரா? அவர் பாகாலியத்தை அழிக்கும்படி அனுப்பப்பட்டார். இதை அவர் நிறைவேற்றினாரா? ஆகாப் ஒரு வெட்கக் கேடான மரணத்தைத் தழுவியபின்னரும்கூட, அவரது மகனான அகசியா இன்னமும் பாகால் சேபூப்பிடம் விசாரித்தார். பாகாலை ஆராதிக்கும் செயலானது அந்தப் புறதெய்வத்தை வணங்கிய எல்லாரையும் கொலைசெய்யும் திட்டத்தை யேகூ செயல்படுத்திய காலம் வரையிலும் அதிகாரம் 10 வரையிலும் தொடர்ந்திருந்தது. எலியா தோல்வியடைந்தாரா?

இல்லை, அவர் தோல்வியடைய*வில்லை!* அவர் மூன்று வழிகளில் வெற்றியடைந்தார். (1) அவர் தமது திறனுக்குகந்த மிகச்சிறப்பான வழியில் தேவனுடைய சித்தத்தைச் செய்தார். தேவன் எந்த ஒரு மனிதரையும் அதற்கு அதிகமாகக் கேட்கவில்லை. (சமீபத்தில் நான் பார்த்த பின்வரும் விளம்பரத்தை நான் விரும்புகிறேன்: "தேவன் நம்மிடம் உள்ள மற்றவற்றைக் காட்டிலும் சிறப்பானதை அல்ல ஆனால் மிகவும் சிறப்பானதையே வருந்திக் கேட்டுக்கொள்கிறார்.")

(2) அவரது முயற்சியின் விளைவாகப் பாகாலை ஆராதித்தல் என்பது மாபெரும் வகையில் கட்டுப்படுத்தப்பட்டது.[7] வடக்கு இஸ்ரவேலில் இருந்த, யெகோவாவின் தீர்க்கதரிசிகளுடைய பள்ளிகள், எலியா காட்சிக்கு வருமுன்னர் சாத்தியமானவைகளாக இருந்திராது. 3ம் அதிகாரத்தில், இஸ்ரவேலின் அடுத்த அரசர் துன்மார்க்கமானவர் என்று நாம் வாசித்தாலும், "தன் தகப்பன் பண்ணுவித்த பாகாலின் சிலையை அகற்றிவிட்டான்" என்று வாசிக்கிறோம் (வசனம் 2).

(3) எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் தாம் ஆயத்தம் செய்வதற்கு உதவியவர்களைத் தாம் சென்றபின்பு தமது ஊழியத்தைத் தொடர்ந்து செய்யும்படி பின்வைத்துப்போனார். எலியா இல்லையேல் எலிசா இருந்திருக்க மாட்டார் - மற்றும் அனேகமாக தீர்க்கதரிசிகளுக்கான பள்ளிகள் இருந்திராது.

எலியாவின் செல்வாக்கானது காலம் இல்லாதொழியும்வரையில் வாழ்வதாக இருக்கும்.[8] மேசியாவின் வழியை ஆயத்தப்படுத்த வரவிருந்தவர் பற்றி மல்கியா பேசியபோது, அவரை அவர் "எலியா" என்று அழைத்தார். மல்கியா, எலியாவின் ஆவியைப் பெற்றவராக வந்த யோவான் ஸ்நானனைக் குறிப்பிட்டார் (லூக்கா 1:17). இயேசு, பாவத்தைச் சகிக்க இயலாத தமது நிலையில், மக்களில் சிலர் அவர் எலியா மறு உருவம் எடுத்து வந்துள்ளார் என்று நினைக்கும் அளவுக்கு மக்களில்

சிலருக்கு உக்கிரமான அந்தத் தீர்க்கதரிசியை நினைவூட்டினார். மறுரூப மலையில் இயேசுவுடன் மோசேயும் எலியாவும் தோன்றினர். மதிப்புள்ள பாடங்களைப் போதிப்பதற்கு இயேசு, பவுல் மற்றும் யாக்கோபு போலவே, எலியாவின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளைப் பயன்படுத்தினார். இயேசு மரித்தபோது அவர் எலியாவைக் கூப்பிட்டதாக மக்கள் நினைத்தனர். இன்றைய நாட்களிலும்கூட, பழமைவாத யூதர்கள், பஸ்கா பண்டிகையின் மேஜையில் மற்றும் விருத்தசேதனச் சடங்குகளில் எலியாவுக்கு ஒரு இடத்தை ஒதுக்கி வைக்கின்றனர்.[9]

நாம் யாவரும் ஒருநாளில் இந்தப் பூமியை விட்டுப் போவோம், மற்றும் இது கொண்டிருக்கக் கூடிய செயல்விளைவை நாம் ஆழ்ந்து சிந்தித்தல் அவசியமாகும். ஆபேல் மரித்தும் பேசத் தொடர்ந்தார் என்று கூறப்பட்டது (எபிரெயர் 11:4). பலர், தாங்கள் (கொடிய வியாதி அல்லது வேறு ஏதோ காரணத்தினால்) மரிப்பதை அறியும்போது, இவ்விஷயத்திற்கு அதிக சிந்தனையைக் கொடுக்கின்றனர். அவர்கள் தங்கள் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளுடன் தீவிரமாகப் பேசுகின்றனர் (எனது தாத்தாவான டேக்கஸ் என்பவர் இதைச் செய்தார்). சிலர் தங்கள் வாழ்விற்குப் பின் வாசிக்க வேண்டிய கடிதங்களை எழுதுகின்றனர், மற்றவர்கள் ஒலிநாடாக்கள் அல்லது ஒளிநாடாக்களைப் பதிவுசெய்கின்றனர். அவர்கள் தங்கள் இருதயங்களில் குறிப்பிட்ட தனிநபர்களைக் கொண்டிருந்தால், அவர்கள் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாக இருக்கும்படி அவர்களுக்குப் போதிக்க முயற்சி செய்து அவர்களை உற்சாகப்படுத்துகின்றனர். ஏற்கனவே உயில் எழுதிவைத்திராதவர்கள் அவற்றை எழுதுகின்றனர். சிலர் ஒரு ஊழியக்கருத்தை, ஒரு கிறிஸ்தவப் பள்ளியை அல்லது பிரசங்கியார் பயிற்சிப் பள்ளியைத் தங்கள் உயில்களில் உள்ளடக்கி, தாங்கள் கடந்து சென்ற பின்பும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் என்பதை உறுதிசெய்துகொள்கின்றனர். அவர்கள் தங்கள் செல்வாக்கை நன்மைக்கானவற்றிற்காக தொடர்ந்து காத்துக்கொள்வதற்குத் தங்களால் இயன்ற *யாவற்றையும்* செய்கின்றனர்.

ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு,[10] நான் பெட்ரீஸியா ஆன் ஹால் என்ற ஒரு இளம் கிறிஸ்தவத் தாயின் சவ அடக்க ஆராதனையில் கலந்துகொண்டேன், அந்தப் பெண்மணி புற்றுநோயினால் இறந்துபோனார். பலமாதங்கள் கடுமையான வேதனைக்குப் பின்பு பெட்ரீஸியா, முடிவின் அருகில் வேதனையற்ற மூன்று நாட்களைக் கொண்டிருந்தார். அந்த நாட்களை அவர் தமது மூன்று பிள்ளைகளுக்கும் பொதுவாக மரணம் பற்றியும், தமது சொந்த மரணத்திற்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதற்காகவும் போதிப்பதில் செலவிட்டார்.

பூமியில் நாளைய தினமே கடைசி நாளாக இருக்கும் என்று நாம் அறிந்திருந்தால், இப்படிப்பட்ட செயல்பாடுகள் மிகமுக்கியமானவற்றின் மத்தியில் இருக்கும்.

## நீங்கள் பரலோகம் செல்வதை நிச்சயப்படுத்திக்கொள்வதில் உங்கள் கடைசி நாளைச் செலவிடுங்கள் (2:11-18)

எலியா தமது கடைசி நாளில் அவரது செயல்பாடுகளினிமித்தமாக மாத்திரம் பரலோகம் செல்லவில்லை, ஆனால் அவரது கடைசி நாளின் செயல்பாடுகள் அவர் வாழ்ந்திருந்த வாழ்வை உயர்த்தின மற்றும் அடுத்த சில வசனங்களில்

சித்தரிக்கப்பட்டுள்ள மாபெரும் காட்சிக்கு அவரை ஆயத்தப்படுத்தின:

"அவர்கள் [எலியாவும் எலிசாவும்] பேசிக்கொண்டு நடந்துபோகையில் ..." (வசனம் 11அ). அந்தக் காட்சியை நான் விரும்புகிறேன்: இரு நண்பர்கள் பேசிக்கொண்டே நடந்து போகின்றனர். எலியாவினுடைய வாழ்வின் காட்சிக்கு இனிய முடிவு, அவர் தமது வாழ்வின் நாடகத்துவமான கணங்கள் ஒன்றில் ஈடுபட்டிருந்தபோதோ அல்லது அவர் ஜெபத்தில் முழங்காற்படியிட்டிருந்தபோதோ வரவில்லை, ஆனால் அவர் எலியாவுடன் பேசிக்கொண்டு நடந்துபோகையில் வந்தது. நாம் ஜெபித்துக்கொண்டிருக்கும்போதோ அல்லது கர்த்தருக்கென்று மாபெரும் ஊழியம் சிலவற்றைச் செய்துகொண்டிருக்கும்போதோ நமது வாழ்வு முடிய வேண்டும் என்று நாம் விரும்பலாம், ஆனால் மரணம் என்பது அதிகம் சாதாரணமாக இருக்க வாய்ப்புகள் உள்ளன. (இது, நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.)

"இதோ, அக்கினி ரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது" (வசனம் 11ஆ). பழங்கால கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில் "இரதம்" என்று (ஒருமையில்) உள்ளது; மற்றவை "இரதங்கள்" என்று (பன்மையில்) சொல்லைக் கொண்டுள்ளன. இது தேவனுடைய சேனையைச் சித்தரிக்கும் எளிய வழியாக இருக்கலாம். 2 இராஜாக்கள் 6:17ல், எலிசாவின் ஊழியக்காரனுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவர் தேவனுடைய சேனையைக் கண்டபோது, நாம், "இதோ, எலிசாவைச்சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்" என்று வாசிக்கிறோம். அந்த வரலாற்றில் "இரதங்கள்" என்பவை தேவனுடைய தூதர்களாக இருந்தனர்.[11] லூக்கா 16:22ல், இலாசரு மரித்தபோது, அவர் "தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்." அதுவே இங்கும் நடைபெற்றது. தேவனுடைய அக்கினியின் மனிதர் இந்த பூமியை விட்டுச் செல்லத் தயாராக இருந்தார், மற்றும் அவரை அழைத்துச் செல்லத் தூதர்கள் வந்தனர்!

"எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்" (வசனம் 11இ). இது நாம், சூறாவளிக் காற்று என்று அழைக்கும் காற்றாக இருக்க அவசியமில்லை, ஆனால் இது ஒரு சுழலும் காற்றாக, வீசியடிக்கும் காற்றாக இருந்தது. தூசு பறந்தது, எலியா மேலேறிச் சென்றார்!

இவ்விடத்தில் தற்செயலாக உள்ள "பரலோகத்திற்கு" என்பது, எலியா பாதாளம், நியாயத்தீர்ப்பு நாள் ஆகியவற்றைப் பக்கவாட்டில் கடந்து, நித்திய அடைவிடத்திற்கு நேரடியாகச் சென்றார் என்ற இறையியல் கூற்றாக இருப்பதில்லை. எலியா இயேசுவைப் போல், ஆகாயத்தில் சென்று, கவனித்துக் கொண்டிருந்தவர்களின் பார்வையில் இருந்து மறைந்தார் என்பதை இது யாவும் குறிப்பிடுகிறது. இருப்பினும், ஒருசில கருத்தில், அந்த நாளில், எப்போதும் கர்த்தருக்கு "முன்பாக நின்றிருந்த" எலியா, அவரை "நன்று செயல்பட்டாய், உண்மையும் உத்தமுமான ஊழியனே"! என்று கூற்றுடன் வரவேற்ற யெகோவாவின் பிரசன்னத்தில் நின்றார் என்பதைப் பற்றி நான் சந்தேகப்படவில்லை.

"அதை எலிசா கண்டு: என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரைவீரருமாய் இருந்தவரே என்று புலம்பினான்; அவனை

அப்புறம் காணாமல்” (வசனம் 12அ). நாம் 13ம் அதிகாரத்திற்குத் திரும்பி எலிசாவின் மரணத்தைப் பற்றி வாசிக்கையில் இதே வார்த்தைகள் பேசப் பட்டதைக் காணும் வரையில் (வசனம் 14) - இங்கு பார்வையில் அக்கினி இரதம் எதுவும் இராவிட்டாலும் - எலிசா தமது கண்களுக்கு முன்பிருந்த காட்சியைக் குறிப்பிட்டார் என்று நாம் யூகம் செய்வோம்.[12] 13ம் அதிகாரத்தில், வார்த்தைகள் தேவனுடைய பரலோக சேனையை அல்ல ஆனால் எலிசாவையே குறிப்பிடுகின்றன. 2:12ல் அவைகள் எலியா கொண்டுசெல்லப்படுதலின் முறையை குறிப்பதற்கு மாறாக அவை எலியாவையே குறிப்பிட்டிருக்கலாம். “இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரைவீரருமாய் இருந்தவரே” என்பது தேவனுடைய சேனையைக் குறித்தது. ஒருவேளை எலிசா, “தேவனுடைய ஒற்றை ஆள் சேனை சென்றுகொண்டிருக்கிறது. நாம் என்ன செய்வோம்?” என்று கூறியிருக்கலாம்.

“தன் வஸ்திரத்தைப் பிடித்து இரண்டு துண்டாகக் கிழித்தான்” (வசனம் 12ஆ). இது மாபெரும் துக்கத்தின் அடையாளமாக இருந்தது. எலிசா அசைக்கப்பட்டார்.

“பின்பு அவன் எலியாவின்மேலிருந்து கீழே விழுந்த சால்வையை எடுத்துத் திரும்பிப்போய், யோர்தானின் கரையிலே நின்று” (வசனம் 13). எல்லாம் இழக்கப்பட்டிருந்ததா? “எலியாவின்மேலிருந்து கீழே விழுந்த சால்வையைப் பிடித்து: எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லித் தண்ணீரை அடித்தான்” (வசனம் 14அ). அவர் “எலியா எங்கே?” என்று கேட்கவில்லை. எலியா எங்கு இருந்தார் என்பதை அவர் [எலிசா] அறிந்திருந்தார். “எலியாவின் *தேவன்* எங்கே? எலியா சென்ற பின்னரும் தேவன் தொடர்ந்து எங்களுடன் இருப்பாரா?” என்பதே கேள்வியாக இருந்தது.

தேவனுடைய மாபெரும் வீரர் ஒருவருடைய மரணமானது, தேவன் மரித்துவிட்டார் என்று அர்த்தப்படுத்துவதில்லை, அந்த ஊழியக்காரர் மாத்திரமே இறந்துபோனார். சால்வையை எடுத்துக் கொண்டு தொடர்ந்து செல்ல மனிதர்கள் உள்ள வரையில், தேவன் தொடர்ந்து செயல்பட முடியும்! “தண்ணீரை அடித்தவுடனே அது இருபக்கமாகப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டான்” (வசனம் 14ஆ). ஆம். தேவன் இன்னும் செயல்பட்டுக்கொண்டிருந்தார், ஆம், தேவன் இன்னமும் உயிருடன் இருந்தார், மற்றும் அவர் இப்போது எலிசாவிற்குள் செயல்துடிப்பாக இருந்தார். எலியாவின் ஊழியம் தொடரும்.

> எரிகோவில் பார்த்துக்கொண்டு நின்ற தீர்க்கதரிசிகளின் புத்திரர் அவனைக் கண்டவுடனே, எலியாவின் ஆவி எலிசாவின்மேல் இறங்கியிருக்கிறது என்று சொல்லி, அவனுக்கு எதிர்கொண்டுபோய்த் தரைமட்டும் குனிந்து அவனை வணங்கி (வசனம் 15).

தீர்க்கதரிசிகளின் புத்திரர்கள் பற்றிய வரலாற்றின் எஞ்சியபகுதியானது, எலியாவின் உடலைக் கண்டுபிடிக்க முயற்சி செய்தும் அவர்களால் அதைக் கண்டுபிடிக்க இயலாமற் போனது பற்றிக் கூறுகிறது (வசனங்கள் 16-18).

மாட்சிமையானதொரு வாழ்விற்கு என்ன ஒரு மாட்சிமையான முடிவு!

நீங்கள் அனேகமாக, “ஆனால் அது எலியாவுக்கு மாத்திரமானதாக இருந்தது. மக்களில் இருவர் மாத்திரமே மரிக்காமல் இவ்வுலகத்தை விட்டுச் சென்றனர் என்பதால், சாதகநிகழ்வுகள் எனக்கு எதிராகவே உள்ளன. அப்படிப்பட்ட

*நாடகத்துவமான நிகழ்வு ஒருக்காலும் எனக்குரியதாக இராது'' என்று நினைக்கலாம். போதுமான வகையில் ஆர்வத்திற்குரியதாக, அப்படிப்பட்ட அனுபவமானது - கிறிஸ்து மறுபடியும் வரும்போது நாம் உயிருடன் இருந்து அவருடன் செல்லத் தயாராக இருந்தால் - சாத்தியக்கூறின் வட்டாரத்திற்குள் உங்களுக்கும் எனக்கும் உரியதாகும்:*

> ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் (1 தெசலோனிக்கேயர் 4:16, 17).

*கிறிஸ்து மறுபடியும் வரும்போது நாம் உயிருடன் இருந்தால், நாம் மறுரூப மாக்கப்படுவோம்; பின்பு நாம் கர்த்தரைச் சந்திப்பதற்கு, மரிக்காமல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம். இருப்பினும், நாம் முதலில் மரித்தாலும், நமது புதிய சரீரங்களுடன் உயிர்ப்பிக்கப்பட்டு எலியா எடுத்துக்கொள்ளப்பட்டது போலவே எடுத்துக்கொள்ளப்படுதல் என்பதும் மன எழுச்சி மிக்கதாகவே இருக்கும் (1 கொரிந்தியர் 15).*

*பூமியில் நமது கடைசி நாளில் எல்லாரும் தயாராக இருத்தல் என்பதிலேயே இரகசியம் அடங்கி உள்ளது.*

## முடிவுரை

*“பூமியில் உங்கள் கடைசி நாளைச் செலவிடுவது எவ்வாறு'' என்பன்மீதான ஐந்து ஆலோசனைகளை நாம் மறுகண்ணோட்டம் இடுவோமாக: தேவனுடைய சித்தத்தைச் செய்வதில் அதைச் செலவிடுங்கள். தேவபக்தியுள்ள நண்பர்களுடன் அதைச் செலவிடுங்கள். தேவனுடைய ஊழியத்தில் அதைச் செலவிடுங்கள். உங்கள் செல்வாக்கை நன்மைக்காகப் பாதுகாப்பதில் அதைச் செலவிடுங்கள். நீங்கள் பரலோகம் செல்வதை உறுதிப்படுத்துவதில் அதைச் செலவிடுங்கள்.*

*யாரேனும் ஒருவர், ''அந்தக் கடைசிநாள் என்றைக்கு என்று நாம் அறிவதில்லையே'' என்று கூறலாம். (ஒரு நியாயாதிபதி கூறாதவரையில்) அது உண்மையாகவே உள்ளது. இது நம்மை அடிக்கோட்டிற்கு கொண்டுவருகிறது: உங்கள் வாழ்வின் ஒவ்வொரு நாளையும் பூமியில் உங்கள் கடைசிநாள் என்ற வகையில் செலவிடுங்கள். இயேசு, “உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்'' என்று கூறினார் (மத்தேயு 24:42).*

*கர்த்தருடைய [மறு] வருகைக்கு நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா?*

---

*குறிப்புகள்*

*[1]இது, மலைப்பகுதியில் இந்தப் பெயரிலேயே குறைவாக அறியப்பட்ட இடமாக இருக்கவும் சாத்தியக்கூறு உள்ளது. [2]எலியா நடந்து சென்றார் என்றிருக்கையில் நாம்*

கார் அல்லது வேறொரு வாகனத்தில் செல்லுகிறோம் என்ற உண்மையை நான் கருத்தில் கொண்டுள்ளேன். உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான நகரங்களின் பெயர்களைப் பயன்படுத்தி இதை உங்களுடையதாக ஆக்கிக்கொள்ளுங்கள். [3]2 இராஜக்கள் 3:11ல், அவர் எலியாவின் கைகளுக்குத் தண்ணீர் வார்த்தவர் என்று அழைக்கப்படுகிறார். [4]மற்ற மொழிபெயர்ப்புகளில் "நீங்கள் அமைதியாயிருங்கள்" என்றுள்ளது. இது "(எலியா செல்வதினால்) கலங்கவோ அல்லது திகைக்கவோ வேண்டாம்" என்று அர்த்தப்பட முடியும். [5]சால்வை என்பது ஒரு நீண்ட உடையாக, தோள்களைச் சுற்றித் தளர்வாகத் தொங்குவதாக இருந்தது. செப்துவஜிந்த் வேதாகமத்தில் "அவரது ஆட்டுத் தோலுடை" என்றுள்ளது. [6]அவர்கள் எதிர்த்திசைகளில் சென்றார்கள் என்பது தவிர. [7]அடுத்த பாடத்தில் கூடுதல் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. [8]ஒருவேளை எலியாவின் மரணத் திற்குப் பின்பு எலிசாவினால் அளிக்கப்பட்ட, அவர் [எலியா] சொந்தமாக எழுதியிருந்த செய்தியொன்று எலியா வாழ்ந்த வாழ்வின் செல்வாக்கிற்கான ஒரு வழியாக இருந்தது (2 நாளாகமம் 21:12). இந்தச் செய்தியைப் பற்றி அதிகமாக அறிய நாம் விரும்புகிறோம் - இது ஒன்றே எலியா தமது எஜமானரின் வார்த்தைகளை எழுதியதற்கான ஒரே உதாரண மாகும். [9]எலியா மரிக்காமலேயே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்பதால் அவர் பரலோகத்தில் அற்புதமான வாழ்வை வாழ்வதாக, பூமிக்குத் திரும்ப எப்போதும் ஆயத்தமாக உள்ளதாக, யூதர்கள் சிலரால் கண்ணோக்கப்பட்டுள்ளார், மேசியாவின் வருகைக்கு முன்னர் அவர் வருவார் என்று அவர்கள் நம்புகின்றனர். மேசியா ஏற்கனவே வந்திருக்கிறார், ஆனால் இது எலியா இன்னும் மதிப்பிற்குரியவராக இருப்பது எவ்வாறு என்பதைக் காண்பிக்கிறது. [10]7 மார்ச்சு 1986.

[11]தூதர்கள் "அக்கினி சுவாலைக்கு" ஒப்பிடப்பட்டுள்ள சங்கீதம் 104:4ஐயும் காணவும். [12]சிலர், குதிரைகளும் இரத(ங்களு)ம் காண இயலாதவையாக இருந்தன என்று நினைக்கின்றனர். அவை அப்படியிருந்தாலும், எலிசா அவற்றைக் காண்பதற்கு நல்ல தொரு வாய்ப்புள்ளது (கவனிக்கவும் 2 இராஜாக்கள் 6:16, 17).

## காட்சி - உதவி குறிப்புகள்

பெரிய அட்டை ஒன்றில் பாடத்தின் தலைப்பையும் சிறு அட்டைகளில் முதன்மைக் கருத்துக்களையும் எழுதுங்கள். உதாரணமாக, "தேவனுடைய சித்தத்தைச் செய்வதில் உங்கள் கடைசி நாளைச் செலவிடுங்கள்." இவைகள் பிரசங்க மேடையில் வைத்து (அல்லது கையில் பிடித்து) காட்சிப்படுத்த வேண்டிய திறவுகோல் அட்டைகளாகப் பயன்படுத்தப்பட முடியும் அல்லது இவைகள் ஒரு பிளானல் பலகையில் காட்சிப்படுத்தப்பட முடியும். (உங்களிடத்தில் ஒரு கணணி மற்றும் சுவரொட்டி மென்பொருள் இருந்ததென்றால், முதன்மைக் கருத்துக்களைச் சுவரொட்டியாக்க நீங்கள் விரும்பலாம்.)

## பாட வரைகுறிப்பு

அறிமுகம்

A. எவரொருவரின் வாழ்விற்கும் மிகவும் நாடகத்துவமான முடிவுகளில் ஒன்று 2 இராஜாக்கள் 2ம் அதிகாரத்தில் காணப்படுகிறது. உலக வரலாற்றிலேயே, இரு மனிதர்கள் மாத்திரமே இறக்காமல்

நேரடியாகப் பரலோகம் சென்றுள்ளனர்: ஏனோக்கு (ஆதியாகமம் 5) மற்றும் எலியா (2 இராஜாக்கள் 2).

B. நாம், "பூமியில் உங்கள் கடைசி நாளைச் செலவிடுவது எவ்வாறு" என்பதை ஆழ்ந்து சிந்திப்போம், ஏனெனில் 2 இராஜாக்கள் 2ல், எலியா தமது கடைசிநாளை எவ்வாறு செலவிட்டார் என்று நமக்குக் கூறப்படுகிறது.

I. தேவனுடைய சித்தத்தைச் செய்வதில் உங்கள் கடைசி நாளைச் செலவிடுங்கள் (2:1, 2).

A. எலியா அந்த நாளுக்கான தமது கடைசி அடைவிடத்தை அறியாதிருந்தார் என்பது உறுதி. அதற்குப்பதிலாக எப்போதும் போலவே அவர், தேவன் தம்மிடம் எங்கு போக வேண்டும் என்று விரும்பினாரோ, அங்கேயே போனார், தேவன் என்ன செய்ய வேண்டும் என்று கூறினாரோ, அதையே செய்தார். அவர் தமது வாழ்வை எவ்வாறு வாழ்ந்தாரோ அவ்வாறே தமது வாழ்வை முடித்தார் - அதாவது தேவனுடைய சித்தத்தின் மையத்தில் அவர் வாழ்ந்து முடித்தார்.

B. நமக்கு இது என்ன ஒரு ஆச்சரியமான உதாரணம்!

II. தேவபக்தியுள்ள நண்பர்களுடன் உங்கள் கடைசி நாளைச் செலவிடுங்கள் (2:1, 2).

A. எலியா "ஒரு தனிமையாளராக" இருந்தார், ஆனால் அவருக்கு ஒரு நண்பர் தேவை என்று தேவன் அறிந்தார், எனவே அவருக்கு அவர் [தேவன்] எலிசாவைக் கொடுத்தார். எலிசா நாள் முழுவதும் அவருடன் [எலியாவுடன்] இருந்தார்.

B. நண்பர்கள் அற்புதமானவர்களாக இருக்கின்றனர் (ஆதியாகமம் 2:18; 1 சாமுவேல் 23:16). இது பூமியில் நமது கடைசிநாள் என்றால், நாம் அந்த நாளை, நாம் நேசிப்பவர்களுடன், விசேஷமாக நாம் மிகச்சிறந்த கிறிஸ்தவர்களாக இருக்க நமக்கு உதவியவர்களுடன் செலவிட விரும்புவோம்.

III. தேவனுடைய ஊழியத்தில் உங்கள் கடைசி நாளைச் செலவிடுங்கள் (2:2-5).

A. எலியா மேற்கொண்ட சுற்றித்திரியும் பயணத்தில் நோக்கம் ஏதாவது இருந்ததா? பெத்தேல் மற்றும் எரிகோ ஆகிய நகரங்களில் இருந்த தீர்க்கதரிசிகளுக்கான பயிற்சிப் பள்ளிகளைப் பார்வையிடுதல் என்பது நோக்கமாக இருந்திருக்கலாம். இந்தப் பள்ளிகளுடன் அவரது உறவுமுறை எதுவாக இருந்தாலும், அவற்றை அவர் பார்வை இட்டதன் நோக்கம் என்னவாக இருந்தாலும், எலியா தமது கடைசி நாளைத் தேவனுடைய ஊழியத்தில் செலவிட்டார்.

B. நாம் யாவரும், கர்த்தருடைய ஊழியத்தில் பணிமும்முரமாக இருக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

IV. உங்கள் செல்வாக்கை நன்மைக்காகப் பாதுகாப்பதில் உங்கள் கடைசி நாளைச் செலவிடுங்கள் (2:2-10).

A. தீர்க்கதரிசிகளின் பள்ளிகளை எலியா பார்வையிடுகையில் மற்றும் கடைசியாகத் தமது ஊழியத்தை எலிசாவிடம் ஒப்படைக்கையில்,

அவர் (கர்த்தருடைய வழிநடத்துதலின்கீழ்) தமது செல்வாக்கு தொடர்ந்து ஜீவிக்கும் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார்.

1. எலியா இந்தப் பள்ளிகளைப் பார்வையிட்ட பின்பு, அவரும் எலிசாவும் யோர்தான் நதியைக் கடந்து சென்றனர்.
    a. எலியாவின் சால்வை தண்ணீரைப் பிரித்தது, உலர்ந்த தரையில் அவரும் எலிசாவும் யோர்தான் நதியைக் கடந்து சென்றனர் (வசனம் 8).
    b. எலிசா, எலியாவின் ஆவியைப் போல "இருமடங்கு" தமக்கு அருளப்பட வேண்டும் என்று கேட்டார்; இது அனேகமாக, தாம் எலியாவின் ஆவிக்குரிய வாரிசாகக் கருதப்படவேண்டு மென்பதற்கான வேண்டுகோளாக இருக்கலாம் (கவனிக்கவும் உபாகமம் 21:17).
2. எலியா தமது ஊழியத்தில் தோல்வியடைந்தாரா அல்லது வெற்றியடைந்தாரா?
    a. அவர் பாகாலியத்தை முற்றிலுமாக ஒழிக்கவில்லை, ஆனால் அவர் தோல்வியடையவும் இல்லை.
        (1) அவர் தம்மால் இயன்ற அளவுக்கு மிகச்சிறப்பாகத் தேவனுடைய சித்தத்தைச் செய்தார். அதற்கு மேல் தேவன் கேட்பதில்லை.
        (2) அவரது முயற்சிகளின் விளைவாக, பாகாலுக்கு ஆராதனை செய்தல் மிகப்பெரிய அளவில் கட்டுப்படுத்தப்பட்டது (கவனிக்கவும் 2 இராஜாக்கள் 3:2).
        (3) ஆயத்தம் செய்ய அவர் யாருக்கு உதவினாரோ, அவர்களிடத்தில் அவர் தமது ஊழியத்தை விட்டுச் சென்றார்.
    b. எலியாவின் செல்வாக்கானது காலம் இல்லாது ஒழியும்வரை ஜீவிக்கும்.

B. நம்மில் ஒவ்வொருவரும் என்றேனும் ஒருநாளில் இந்தப் பூமியை விட்டுச் செல்வோம். நாம் விட்டுச் செல்பவை கொண்டிருக்கும் செயல்விளைவு பற்றி நாம் ஆழ்ந்து சிந்தித்தல் அவசியமாக உள்ளது.

V. நீங்கள் பரலோகம் செல்வதை நிச்சயப்படுத்திக் கொள்வதில் உங்கள் கடைசி நாளைச் செலவிடுங்கள் (2:11-18).

A. எலியாவின் கடைசிநாளில் அவரது செயல்பாடுகள், அவரது வாழ்வை உயர்த்தின மற்றும் அவரை, சுழல்காற்றில் எடுத்துக்கொள்ளப்படுதல் என்ற அவரது வாழ்வின் உச்சக்காட்சிக்கு ஆயத்தப்படுத்தின!

B. நாம் மரிப்பதற்கு முன்னர் கிறிஸ்து மறுபடியும் வருவார் என்றால் - மற்றும் நாம் ஆயத்தமாக இருந்தோமென்றால் - இப்படிப்பட்ட நாடகத்துவமான முடிவு நம்முடையதாகவும் இருக்க முடியும் (1 தெசலோனிக்கேயர் 4:16, 17)! அதற்கு முன்பே நாம் மரித்தோம் என்றாலும், கிறிஸ்துவின்

*மறுவருகையானது அப்போதும் மன எழுச்சியுள்ளதாகவே இருக்கும் (1 கொரிந்தியர் 15)!*

*முடிவுரை*

A. *யாரேனும் ஒருவர், "எனது கடைசிநாள் என்றைக்கு என்று எனக்குத் தெரியாதே" என்று கூறலாம். நாம் நமது வாழ்வின் ஒவ்வொரு நாளையும், அதுவே பூமியில் நமது கடைசி நாள் என்பது போல் செலவிட வேண்டும் (மத்தேயு 24:42).*

B. *கர்த்தருடைய மறுவருகைக்கு - அல்லது உங்கள் மரணத்திற்கு - நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா?*